**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி</u>**

**<u>SC. 106/2023</u>**

<u>நாள்.27.04.2026</u>

**<u>குற்றவியல் பல்வகை மனு எண்.09/2026 உத்தரவின் பேரில் அ.சா.2 மீண்டும் அழைத்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

சம்பவம் நடந்த நேரத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் அரசு தொடக்கப்பள்ளி பாமணியில் இருந்தேன். எனது வீட்டிற்கும் அந்த பள்ளிக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் கால் கிலோமீட்டர் துாரம் இருக்கும். எனது மகள் பள்ளி முடித்துவிட்டு எத்தனை மணிக்கு வீட்டிற்கு வருவார் என்றால் மாலை 4.20 மணிக்கு வருவார். 11ம் வகுப்பு படிக்கும் எனது மகள் என்ன பிரிவில் படித்து வந்தார் என்றால் அறிவியல் பிரிவில். எதிரியும், எனது மகளும் பேசி, பழகியதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி சம்பவ நாளில் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சம்பவ இடத்திற்கு வந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு எதிராக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.